# கொழும்புப் பல்கலைக்கழகம் - இலங்கை

கலைப்பீடம்

**மூன்றாம் வருட கற்கைப் பிரிவு கலைமாணிப் பரீட்சை (புவியியல்)**

இரண்டாம் பருவம் - இறுதித் தவணைப் பரீட்சை – 2017/2018

## GYG 3266: சூழல் மாசு மற்றும் முகாமைத்துவம்

நேரம்: 02 மணித்தியாலங்கள்

மூன்று (03) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.

இலங்கைப் புறவுருவப்படங்கள் இரண்டு (02) வழங்கப்படும்.

---

**1)**

i) "பசுமை நகரம்" என்பதனால் கருதப்படுவது யாது?

(03 புள்ளிகள்)

ii) தரப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப்படத்தில் நகர சூழல் மாசுபாட்டால் பாதிக்கப்பட்டுள்ள ஐந்து (05) நகரங்களை குறித்துப் பெயரிடுக.

(05 புள்ளிகள்)

iii) படத்தில் உம்மால் குறிக்கப்பட்ட ஒரு நகரத்தைத் தெரிவுசெய்து, இலங்கையில் நகர சூழல் மாசுபாட்டைக் குறைப்பதில் பசுமை நகர எண்ணக்கருவின் முக்கியத்துவத்தினை விளக்குக.

(12 புள்ளிகள்)

2)

i) "ஒருங்கிணைந்த திண்மக் கழிவு முகாமைத்துவம்" (Integrated Solid Waste Management-ISWM) என்பதனால் நீர் விளங்கிக்கொள்வது யாது?

(04 புள்ளிகள்)

ii) திண்மக் கழிவுகளின் தொகை அதிகரித்தலுக்கான பிரதான காரணங்கள் யாவை?

(06 புள்ளிகள்)

iii) இலங்கையில் உள்ள திண்மக் கழிவு மீள்சுழற்சி முறைகளைக் குறிப்பிட்டு அம் முறைகளின் சமூக பொருளாதார மற்றும் சூழலியல் நலன்களை சுருக்கமாக ஆராய்க.

(10 புள்ளிகள்)

3)

i) சூழல் முகாமைத்துவத்தில் பெண்களது பங்களிப்பின் முக்கியத்துவத்தினை விளக்குக.

(10 புள்ளிகள்)

ii) "இலங்கையில் சூழல் மாசுபாட்டைக் குறைப்பதில் தற்போதுள்ள சூழல் கல்வி மற்றும் விழிப்பூட்டல் நிகழ்ச்சிகள் மேலும் பலப்படுத்தப்படல் வேண்டும்." உதாரணங்களுடன் இக் கூற்றினை விளக்குக.

(10 புள்ளிகள்)

4)

i) இலங்கையில் இயற்கை சமநிலையைப் பராமரிப்பதில் பாரம்பரிய அறிவினை (Traditional Knowledge) எவ்வாறு உபயோகிக்கக்கூடியதாகவிருக்கும் என்பதனை உதாரணங்களுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

ii) இலங்கையில் சூழல் முகாமைத்துவத்தில் பாரம்பரிய அறிவினைப் பிரயோகிப்பதில் எதிர்கொள்ளப்படும் சவால்களை உதாரணங்களுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

5)

i) "சூழல் தாக்க மதிப்பீடு" (Environmental Impact Assessment-EIA) என்பதனை வரையறை செய்க.

(04 புள்ளிகள்)

ii) இலங்கையில் பல்வேறுபட்ட அபிவிருத்தித் திட்டங்களில் சூழல் தாக்க மதிப்பீட்டின் முக்கியத்துவத்தினை உதாரணங்களைக் கொடுத்து விளக்குக.

(08 புள்ளிகள்)

iii) சூழல் தாக்க மதிப்பீட்டினை நடைமுறைப்படுத்துவதில் எதிர்கொள்ளப்படும் சவால்களைப் பரிசீலனை செய்க.

(08 புள்ளிகள்)

6)

i) இலங்கையில் காணப்படும் ஐந்து (05) பிரதான சூழல் சட்டங்களைக் குறிப்பிட்டு அச் சட்டங்களின் பிரதான நோக்கங்களைக் குறிப்பிடுக.

(08 புள்ளிகள்)

ii) இலங்கையில் மேலே குறிப்பிடப்பட்ட ஏதேனுமொரு சூழல் சட்டத்தினை நடைமுறைப்படுத்துகின்ற போது எழுகின்ற பிரச்சினைகளை விவரிக்குக.

(12 புள்ளிகள்)

*****************